# இன்று சென்னை திரும்புகிறார் முதல்வர்



**சென்னை, டிச. 30:** தென் மாவட்ட பயணத்தை நிறைவு செய்து முதல்வர் மு.க.ஸ்டாலின், செவ்வாய்க்கிழமை பிற்பகல் சென்னை திரும்புகிறார்.

தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு 3 நாள்கள் பயணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஞாயிற்றுக்கிழமை சென்றார். சிப்காட் பூங்கா திறப்பு, புதுமைப் பெண் திட்ட விரிவாக்கம் என தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், திங்கள்கிழமை பிற்பகல் கன்னியாகுமரி சென்றடைந்தார். அங்கு விவேகானந்தர் பாறை மற்றும் திருவள்ளுவர் சிலைக்கு இடையே கண்ணாடி இழை மேம்பாலத்தை திறந்து வைத்தார்.

செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின், தூத்துக்குடியில் இருந்து பிற்பகலில் விமானம் மூலமாக சென்னை திரும்புகிறார்.

தென் மாவட்டங்களில் தனது பயணத்தை செவ்வாய்க்கிழமையுடன் நிறைவு செய்கிறார்.

ஆங்கிலப் புத்தாண்டு புதன்கிழமை பிறக்கவுள்ள நிலையில் அவரை அமைச்சர்கள், திமுக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சித் தலைவர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவிக்கவுள்ளனர்.

# ஆளுநருடன் அண்ணாமலை சந்திப்பு



**சென்னை, டிச.30:** ஆளுநர் ஆர். என். ரவியை தமிழக பாஜக தலைவர் கே. அண்ணாமலை திங்கள்கிழமை மாலை சந்தித்துப் பேசினார்.

அண்ணா பல்கலை. வளாகத்தில் மாணவிக்கு நிகழ்ந்த பாலியல் வன்கொடுமை சம்பவத்துக்கு அண்ணாமலை கண்டனத்தைத் தெரிவித்திருந்தார். இந்த சம்பவத்தைக் கண்டித்து அவர், வெள்ளிக்கிழமை கோவையில் உள்ள தனது வீட்டு வாசலில் சவுக்கால் அடித்துக் கொண்டு போராட்டத்திலும் ஈடுபட்டார்.

இந்நிலையில், சென்னை கிண்டி ஆளுநர் மாளிகையில் ஆளுநர் ஆர். என். ரவியை அண்ணாமலை திங்கள்கிழமை மாலை சந்தித்தார். அப்போது, மாணவி வன்கொடுமை விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரிடம் அவர் வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது.

முன்னதாக, மாணவி வன்கொடுமை சம்பவம் தொடர்பாக ஆளுநரை தவெக தலைவர் விஜய் திங்கள்கிழமை சந்தித்து கோரிக்கை மனு அளித்திருந்த நிலையில், மாலையில் ஆளுநரை அண்ணாமலை சந்தித்தார்.

# மாணவிக்கு நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

## எடப்பாடி பழனிசாமி

**சென்னை, டிச. 30:** அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு நீதி கிடைக்கும் வரை அதிமுகவின் போராட்டம் தொடரும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரத்தில் திமுக அரசைக் கண்டித்து அதிமுக சார்பில் பல கட்டங்களாகப் போராட்டம் நடைபெற்றது. இந்த நிலையில் தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் திங்கள்கிழமை போராட்டம் நடைபெற்றது.

சென்னை மாவதரம் மண்டல அலுவலகம் அருகே முன்னாள் அமைச்சர் மாதவரம் மூர்த்தி தலைமையில் ஆர்ப்பாட்டமும், சாலை மறியலும் நடைபெற்றது. இதில், பங்கேற்றோர் அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பி, வழக்கை சிபிஐக்கு மாற்ற வலியுறுத்தினர்.



போரூர் காரம்பாக்கத்தில் முன்னாள் அமைச்சர் பெஞ்சமின் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. விழுப்புரத்தில் சி.வி. சண்முகம், திருவண்ணாமலையில் அக்ரி.எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, கோவையில் எஸ்.பி.வேலுமணி, மதுரையில் செல்லூர் ராஜூ, நாகப்பட்டினத்தில் ஓ.எஸ்.மணியன், சேலத்தில் செம்மலை, ஈரோட்டில் கே.ஏ.செங்கோட்டையன் ஆகியோர் தலைமையிலும் போராட்டம் நடைபெற்றது.

காவல் துறையின் அனுமதி பெறாமல் போராட்டம் நடத்திய அதிமுகவினர் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

**போராட்டம் தொடரும்:** இந்த விவகாரம் தொடர்பாக அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி திங்கள்கிழமை எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவு:

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி வேண்டியும், தமிழகத்தில் சிறுமிகள், கல்லூரி மாணவிகள், பெண்கள் பாதுகாப்பைக் கேள்விக்குறி ஆக்கியுள்ள திமுக அரசைக் கண்டித்தும் அதிமுக சார்பில் போராட்டம் நடத்தியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மக்கள் குரலின் பிரதிபலிப்பான எதிர்க்கட்சியின் குரலை ஒடுக்க முயலும் திமுக அரசுக்கு கடும் கண்டனம்.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய வழக்கில் திமுகவைச் சேர்ந்தவர், போதைப் பொருள் கடத்தல் வழக்கில் திமுக அயலக அணி மாவட்ட அமைப்பாளர் என்று குற்றப் பின்னணி பட்டியல் நீளுகிறது.

அதனால், இந்த வழக்கிலும் ஏதேனும் அரசியல் தலையீடு இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அனைத்து உண்மைக் குற்றவாளிகளும் பிடிபட்டு பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கிடைக்கும் வரை அதிமுகவின் போராட்டம் தொடரும். வழக்கில் தொடர்புடைய ஞானசேகரன் குறிப்பிடும் அந்த சார் யார் என்று அவர் கூறியுள்ளார்.

# மாணவிகளிடம் அச்ச உணர்வை ஏற்படுத்துவதா?

## எதிர்க்கட்சித் தலைவருக்கு அமைச்சர்கள் கண்டனம்

**சென்னை/புதுக்கோட்டை, டிச. 30:** எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமியின் போராட்ட நாடகம் கல்லூரி மாணவிகள், பெற்றோர்களிடம் அச்ச உணர்வை ஏற்படுத்துவதாகக் கூறி, அவருக்கு அமைச்சர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் திங்கள்கிழமை வெளியிட்ட பதிவு:

முதல்வராக இருந்த போது 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதையே தொலைக்காட்சியைப் பார்த்து தெரிந்து கொண்டதாகக் கூறியிருந்த தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, தற்போது மாணவி வன்கொடுமை விவகாரத்தில் பரவி வரும் தகவலை அடிப்படையாக வைத்து போராட்டம் என்ற பெயரில் மக்களை வாட்டி வதைக்கிறார். திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள் உயர்கல்வி பயில்வது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதை சிதைக்கும் வகையில், ‘சார் யார்?’ என்று இல்லாத ஒன்றைக் கேட்டு அரசியல் ஆதாயம் தேடுகிறார்.

பாலியல் வன்கொடுமை சம்பவங்களில் பெண்கள் காவல் துறையினரிடம் புகார் அளிக்கவே அஞ்சி நடுங்கிய நிலை திராவிட மாடல் ஆட்சியில் மாற்றப்பட்டு, பாதிக்கப்பட்ட பெண்கள் துணிச்சலாக புகார் தருகின்றனர். அவர்களை மீண்டும் அச்சுறுத்தும் விதமாகத்தான் எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கை அரசியலையும், போராட்ட நாடகத்தையும் மக்கள் பார்க்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

**சமூக நலத் துறை அமைச்சர் கீதாஜீவன்:** புதுமைப்பெண் திட்டம், பெண்கள் விடியல் பயணம், மகளிர் உரிமைத் தொகை என பெண் கல்விக்கும், பெண்கள் முன்னேற்றத்துக்குமான திட்டங்களை திராவிட மாடல் ஆட்சி செயல்படுத்தி வருகிறது. இத்தகைய ஆட்சி மீதும், முதல்வர் குறித்தும் எத்தகைய அவதூறு பரப்பினாலும் அதை தமிழ்நாட்டு பெண்கள் துளியும் நம்பப் போவதில்லை. மாணவி வன்கொடுமை விவகாரத்தில் தேவையின்றி அரசியல் செய்வதையும் வதந்திகளை பரப்பி மாணவிகளின் கல்வியோடு விளையாடுவதையும் எதிர்க்கட்சித் தலைவர் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி:** புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அதிமுக ஆட்சிக்காலத்தில் பொள்ளாச்சியில் நடந்த பாலியல் சம்பவத்தில் மக்கள் போராட்டத்துக்குப் பிறகே விசாரணை நடத்தப்பட்டது. தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறந்துவிட்டு அதிமுகவினர் தற்போது திமுக அரசு மீது பழிபோட முயற்சிக்கின்றனர். அதிமுகவினர் ஆர்ப்பாட்டம் நடத்துவது கபட நாடகம்.

பெண்கள் பாதுகாப்புக்காக ஆளுநரை சந்தித்து விஜய் மனு அளித்துள்ளார். நாட்டிலேயே பாதுகாப்பான மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. வேண்டுமென்றால், பிகார், ஒடிஸா போன்ற பிற மாநிலங்களை விஜய் பார்த்துவிட்டு வந்து கூறட்டும் என்றார் அவர்.

# தமிழகத்தில் சட்டம்- ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டும்

## ஆளுநரிடம் விஜய் வலியுறுத்தல்



தமிழகத்தில் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்வது உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவை ஆளுநர் ஆர்.என்.ரவியிடம் திங்கள்கிழமை அளித்த தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய். உடன் அக்கட்சியின் பொதுச்செயலர் புஸ்ஸி ஆனந்த்.

**சென்னை, டிச. 30:** தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டும் என ஆளுநர் ஆர்.என். ரவியை சந்தித்து தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் வலியுறுத்தினார்.

ஆளுநரை தவெக தலைவர் விஜய், பொதுச் செயலர் புஸ்ஸி ஆனந்த், பொருளாளர் வெங்கட்ராமன் ஆகியோர் திங்கள்கிழமை ஆளுநர் மாளிகையில் சந்தித்துப் பேசினர். அப்போது மூன்று பக்க கோரிக்கை மனுவை ஆளுநரிடம் அளித்தனர்.

இதுதொடர்பாக புஸ்ஸி ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கை: ஆளுநரிடம் அளித்த மனுவில், தமிழகத்தில் சட்டம்- ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டும், அனைத்து இடங்களிலும் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.

மேலும், தமிழகம் முழுவதும் அண்மையில் பெய்த பருவமழை மற்றும் ஃபென்ஜால் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை உரிய நிவாரணம் கிடைக்கவில்லை. இந்த விவகாரத்தில் மாநில அரசு கேட்கும் நிவாரணத் தொகையை மத்திய அரசு முழுமையாக வழங்க வேண்டும் என தவெக சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. எங்கள் கோரிக்கைகளைக் கேட்ட ஆளுநர், அவற்றைப் பரிசீலிப்பதாக கூறியுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

**விஜய் கடிதம்:** முன்னதாக, சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்துக்கு தவெக தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்து கடித வடிவில் வெளியிட்ட அறிக்கை: எல்லா சூழல்களிலும், நிச்சயமாக உங்களுடன் (மாணவிகள்) நான் உறுதியாக நிற்பேன். பாதுகாப்பான தமிழகத்தைப் படைத்தே தீருவோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**புஸ்ஸி ஆனந்த் கைது:** இதற்கிடையே, விஜயின் கடித நகல்களை சென்னையில் பொதுமக்களுக்கு தவெக தொண்டர்கள் விநியோகித்தனர். தனியார் மகளிர் கல்லூரி அருகே விநியோகிக்கக் கூடாது என அவர்களை காவலர்கள் தடுத்து நிறுத்தியதால் வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து, கட்சித் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களை காணச் சென்ற பொதுச் செயலர் புஸ்ஸி ஆனந்த், தியாகராயநகரில் கைது செய்யப்பட்டார்.

கட்சியினர் கைது செய்யப்பட்டதற்கு விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கையில், ஜனநாயக வழியில் பிரசுரங்களை விநியோகம் செய்ய முயன்றவர்களை காவல் துறை கைது செய்தது கண்டனத்துக்குரியது. இது போன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகளை மக்கள் வெகுகாலம் வேடிக்கை பார்க்க மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# தமிழ் மொழி மீது அக்கறை இருப்பதுபோல மத்திய அரசு நாடகமாடுகிறது: காங்கிரஸ் குற்றச்சாட்டு

**சென்னை, டிச. 30:** தமிழ் மொழி மீது அக்கறை இருப்பதுபோல மத்திய அரசு நாடகமாடுகிறது என்றும், ஒரே நாடு மொழி என்பதுதான் அதன் நோக்கம் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை கூறினார்.

இது தொடர்பாக அவர் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கை: பிரதமர் மோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் பேசியபோது, உலகின் மிகத் தொன்மையான மொழி தமிழ் மொழி என்பதில் ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை என்று குறிப்பிட்டு பேசியுள்ளார். இதேபோல கடந்த காலங்களில் திருவள்ளுவர், பாரதியார் ஆகியோரை மேற்கோள் காட்டி பேசியிருக்கிறார். இதன்மூலம் அனைத்து மொழிகளையும் சமமாக கருதுவதாக ஒரு நாடகத்தை நீண்டகாலமாக அரங்கேற்றி வருகிறார். உண்மையிலேயே பிரதமர் மோடிக்கு தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தொடர்பில்லை என்பதை நிச்சயமாக உணர முடியும். மத்திய அரசின் ஒரே நோக்கம் ஒரே நாடு, ஒரே மொழி என்பதுதான். ஹிந்தியையும், கலாசார ரீதியாக சம்ஸ்கிருதத்தையும் மக்கள் மீது திணிப்பதே அதன் செயல்பாடு. பிரதமரின் நாடகத்தை தமிழக மக்கள் என்றைக்கும் ஏற்க மாட்டார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

# பொங்கல் தொகுப்புடன் ரொக்கம்: கட்சித் தலைவர்கள் வலியுறுத்தல்

**சென்னை, டிச. 30:** குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரொக்கப் பணமும் தமிழக அரசு வழங்க வேண்டும் என்று அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

**ச.ராமதாஸ் (பாமக):** திமுக ஆட்சியில் கடந்த இரு ஆண்டுகளாக பொங்கல் பரிசுத் தொகுப்பில் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.1,000 இந்த முறை வழங்கப்படாதது கண்டிக்கத்தக்கது. 2024-இல் தேர்தல் வந்ததால் அந்த ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் ரூ.1,000 கொடுத்த தமிழக அரசு, 2025-ஆம் ஆண்டில் தேர்தல் இல்லை என்பதால் பணம் வழங்கவில்லை என்று தெரிகிறது. பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.1,000 சேர்த்து வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும்.

**இரா.முத்தரசன் (இந்திய கம்யூனிஸ்ட்):** பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.1,000 வழங்க வேண்டும். ரொக்கத் தொகை கிடைக்கும் என்று எதிர்பார்த்துள்ள மக்களுக்கு ஏமாற்றம் அளிக்கக் கூடாது. நிதிப் பற்றாக்குறையை காரணம் காட்டி பணம் வழங்க மறுப்பது பொருத்தமல்ல.

**கே.பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட்):** தமிழ்நாடு அரசு பொங்கல் தொகுப்பு திட்டத்தை அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. அதேநேரத்தில் வழக்கமாக வழங்கப்படும் பொங்கலுக்கான பரிசுத் தொகை அறிவிக்கப்படாதது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே, அரசு பொங்கல் பரிசுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பிரேமலதா (தேமுதிக):** பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.1,000 வழங்க வேண்டும். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உரிய நிவாரணத் தொகையையும் வழங்க வேண்டும்.

**ஜி.கே.வாசன் (தமாகா):** பொங்கல் பரிசுத் தொகுப்புடன் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.2,000 வழங்க வேண்டும். விவசாயிகளிடம் இருந்து கரும்பை அரசு நேரடியாக கொள்முதல் செய்து வழங்க வேண்டும்.

**டி.டி.வி.தினகரன் (அமமுக):** பொங்கல் பரிசுத் தொகுப்புடன் குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் ரொக்கப் பணமும் வழங்க வேண்டும். அந்தத் தொகை உரியவர்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.


**NOTICE**

**Titan Company Limited**
**Registered Office: 3, Sipcot Industrial Complex, Hosur-635126, TN**

NOTICE is hereby given that the certificate[s] for the undermentioned securities of the Company have been lost/ misplaced and the legal heirs of the said securities have applied to the Company to issue duplicate certificates.

Any person who has a claim in respect of the said securities should lodge such claim with the Company at its Registered Office within 15 days from this date, else the Company will proceed to issue duplicate certificate[s] without further intimation.

**Names of holder and Jt. Holder :** Eashwari Raju and Chetput Raju
**Kind of Securities and face value :** Equity Shares of Rs 1 each
**No. of Securities :** 3580
**Distinctive numbers :** 20025001 to 20028580

**Mumbai**
**Dated 27 Dec 2024**
**Ravindra Raju and Chandrakant Raju**

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் — நகை ஏல தேதி மாற்று அறிவிப்பு

திருத்தம் — ICICI Bank

டிசம்பர் 12, 2024 அன்று தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் (ஆங்கிலம்) மற்றும் தினமணி (தமிழ்) சென்னைப் பதிப்பில் வெளியான 039505009249, 039560000030 & 039560000041- ...

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட் (TMB) — சென்னை மவுண்ட் ரோடு கிளை — அசையா சொத்துக்கான ஏல விற்பனை அறிவிப்பு

இடம் : சென்னை
தேதி : 23.12.2024

இந்துசமய அறநிலையத்துறை — அருள்மிகு பிடாரி உத்தனாட்சியம்மன் மங்களேஸ்வரர் (ம) பாவநாயகர் திருக்கோயில் — மறு ஏலம் / மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள் - 31.12.2024

வர்த்தனா ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் (varthana) — சுவாதீன அறிவிப்பு [விதி-8(1)]

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி — Appendix-IV — அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு (Rule 8(1))

தேதி : 27.12.2024

கோட்டக் மஹிந்திரா வங்கி லிமிடெட் (kotak)
பதிவு அலுவலகம்: 27 BKC C 27, G பிளாக், பாந்த்ரா வளாகம், பாந்த்ரா (கி), மும்பை - 400051.
கிளை அலுவலகம்: 5வது தளம், A பிரிவு, சாம்சன் டவர்ஸ், எண் 402 L - பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-600008
பிற்சேர்க்கை-IV-A [பார்க்க விதி 8(6)- இன் விதிமுறைகள் ]
ஏல விற்பனை அறிவிப்பு- அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு